# யூனியன் பாங்க் ஆப் இந்தியா பணியாளர்கள் கூட்டுறவு சிக்கனம் மற்றும் கடன் சங்கம் லிமிடெட்.,

No. MSCS/CR/44/94

புதிய எண்.337, பழைய எண்.164, 3வது மாடி, எண்.S-6,
'சிங்கப்பூர் பிளாசா', லிங்கி செட்டி தெரு, சென்னை – 600 001.
தொலைபேசி : 044 – 2535 3990 கைபேசி : 9445724630 மின்னஞ்சல் : ubisociety@gmail.com

**தலைவர் : V.வெற்றிவேல்** **துணைத்தலைவர் : E. நாகேந்திரன்**


## திட்டங்கள் – செயல்பாடுகள்

யூனியன் பாங்க் ஆப் இந்தியா பணியாளர்கள் கூட்டுறவு சிக்கனம் மற்றும் கடன் சங்கம் கடந்த 1985 ஆம் ஆண்டு மே 17ஆம் நாள் கூட்டுறவு சங்கமாக தமிழகத்தில் பதிவு செய்யப்பட்டு, 06.08.1985 முதல் சென்னையிலுள்ள யூனியன் வங்கி ஊழியர்களின் நலனுக்காக செயல்படத் துவங்கியது. பின்னர் செயல்படும் பகுதி, தமிழகம் முழுமைக்கும் விரிவுபடுத்தப்பட்டது.

கடந்த 21.02.1994 முதல் நமது சங்கமானது, பல மாநில **(Multi State)** கூட்டுறவு சங்கமாக மத்திய பதிவாளர் (கூட்டுறவு), புதுதில்லியில் பதிவு செய்யப்பட்டு தமிழ்நாடு, கேரளம், கர்நாடகம் மற்றும் பாண்டிச்சேரி யூனியன் பிரதேச கிளைகளிலுள்ள யூனியன் வங்கி ஊழியர்களுக்காகப் (Award Staff) பணியாற்றி வருகிறது. சங்கம் பொது மகாசபைக் கூட்டத்தில் ஜனநாயக முறையில் தேர்வு செய்யப்படும் 13 இயக்குனர்களால் நிர்வகிக்கப்பட்டு வருகிறது. அவர்களின் பதவிக்காலம் மூன்று ஆண்டுகள் ஆகும்.

### 1. கடன்கள்

#### (i) பிணையக்கடன் (Surety Loan)

தற்சமயம் பிணையக்கடனாக, அதாவது மற்றொரு ஊழியரின் பிணையின் அடிப்படையில், ரூ.6,00,000/- (ஆறு லட்சம் மட்டும்) வரை, 120 மாதங்களில் / அவரது வங்கிப் பணிக்காலத்தில் திருப்பிச் செலுத்தும் கடனாக, நிபந்தனைகளுக்கு உட்பட்டு பரிசீலிக்கப்பட்டு வழங்கப்படுகிறது.

#### (ii) பண்டிகைக் கடன் (Festival Loan)

தற்சமயம் பிணையக்கடனாக, ரூ.25,000/- (இருபத்து ஆயிரம் மட்டும்) வரை, 12 மாதங்களில் திருப்பிச்செலுத்தும் கடனாக, நிபந்தனைகளுக்கு உட்பட்டு, பரிசீலிக்கப்பட்டு வழங்கப்படுகிறது.

இந்த இரண்டு கடன்களுக்கும் தற்போது வருட வட்டி 9.50%, தினசரி கடன் நிலுவை (Daily Product Basis) அடிப்படையில் வசூலிக்கப்படுகிறது.

#### (iii) தேசிய பேரிடர் நிவாரணக் கடன் (National Calamity Loan)

தற்சமயம் பேரிடர் நிவாரணக் கடனாக, ரூ.20,000/- (இருபது ஆயிரம் மட்டும்) வரை, 24 மாதங்களில் திருப்பிச் செலுத்தும் கடனாக, நிபந்தனைகளுக்கு உட்பட்டு, பரிசீலிக்கப்பட்டு வழங்கப்படுகிறது. இக்கடனுக்கு பங்கு மூலதனம் மற்றும் பிணையாளர் தேவையில்லை, இக்கடனுக்கு தற்சமயம் 8.50% வட்டி வசூலிக்கப்படுகிறது.

**2. பங்கு மூலதனம் (Share Capital) :**

சங்கப் பங்குகளின் மதிப்பு ரூ.10/- ஒவ்வொரு உறுப்பினரும் குறைந்தபட்சம் 10 பங்குகளை வைத்திருக்க வேண்டும். மேலும், எவ்வளவு பங்கு மூலதனம் உள்ளதோ, அதன் 20 மடங்கு வரை பிணைக்கடன் / பண்டிகைக் கடன் பெறலாம். கடன் பெறும்போது, கடனில் இருந்து பங்கு மூலதனத்திற்கு பிடித்தம் செய்யும் வசதியும் உள்ளது. கடந்த ஆண்டு (20-21) பங்கு மூலதனத்திற்கு 10.00% லாப ஈவு வழங்கப்பட்டது.

**3. வைப்புத்தொகைகள் :**

**(i) சிக்கன வைப்பு (Thrift Deposit)**

ஒவ்வொரு உறுப்பினரும் கட்டாயமாக குறைந்தபட்ச சேமிப்புத் தொகையாக ரூ.700/- செலுத்தவேண்டும். உறுப்பினர் சங்கத்திலிருந்து விலகும்போது இந்தத் தொகை திருப்பி தரப்படும். தற்சமயம் இதற்கான வட்டி 8%. இந்த வட்டி நிதியாண்டின் கடைசி வேலைநாளில் உறுப்பினரின் வங்கிக்கணக்கில் செலுத்தப்படும். விருப்பமுள்ள உறுப்பினர்கள் அதிகமான சேமிப்புத் தொகையை ரூ.100/- மற்றும் அதன் மடங்குகளாகச் செலுத்தலாம்.

**(ii) அலகு வைப்பு (Unit Deposit)**

உறுப்பினர்கள் பிணைக்கடன் / பண்டிகைக் கடன் பெறும்போது, பங்கு மூலதனத்திற்கு இணையாக, அலகு வைப்புகளையும் வைத்திருப்பது அவசியம். கடன் பெறும்போது, கடனில் இருந்து அலகு வைப்பிற்கு பிடித்தம் செய்யும் வசதியும் உள்ளது. கடந்த ஆண்டு அலகு வைப்பிற்கு 9.0% வட்டி வழங்கப்பட்டது. இந்த வட்டித்தொகை, வருடத்தின் கடைசி வேலைநாளில், அவர்களது வங்கிக் கணக்குகளில் வரவு வைக்கப்படும்.

**(iii) நிரந்தர வைப்புதொகை (Fixed Deposits)**

கூட்டுறவு சங்கம் நிரந்தர வைப்பு (Fixed Deposit), வைப்பு மறு முதலீடு திட்டம் (Deposit Reinvestment Scheme) மற்றும் தொடர் வைப்பு (Recurring Deposit) ஆகியவைகளை உறுப்பினர்களிடம் இருந்து ஏற்றுக்கொள்கிறது. வைப்பு காலம் ஒரு வருடம் மட்டுமே

வைப்புத்தொகை / வைப்பு மறு முதலீடு ஆகியவற்றில் குறைந்தபட்சம் ரூ.5,000/- முதலீடு செய்யலாம். மேலும் ரூ.1,000/- மற்றும் அதன் மடங்குகளில் முதலீடு செய்யலாம். தொடர் வைப்பு தொகை ரூ.100/- மற்றும் அதன் மடங்குகளில் ஏற்றுக்கொள்ளப்படும். ரூ.50,000/- அல்லது அதற்கு மேல் வைப்புத் தொகையை ஒரே ரசீதாக வைத்துள்ள உறுப்பினர்கள் விரும்பினால் மாத வட்டியைப் பெற்றுக்கொள்ளலாம். மற்றவர்களுக்கு காலாண்டு வட்டி மார்ச், ஜீன், செப்டம்பர் மற்றும் டிசம்பர் மாதங்களின் கடைசி வேலைநாளில் அவர்களின் வங்கிக் கணக்கில் வரவு வைக்கப்படும்.

இயக்குனர் குழுவின் ஒப்புதலுடன் வைப்புதொகையில் 90% வரை கடன் பெறவும், வைப்புதொகையை முதிர்வு காலத்திற்கு முன்பு பெறவும் இயலும். தற்போது வைப்புகளுக்கான வட்டி 8% ஆகும்.

உறுப்பினர்கள் தொடர் வைப்புகளில் மாத மாதம் தங்களின் விருப்பப்படி தவணை செலுத்தலாம்

**4. உறுப்பினர் நலத்திட்டங்கள் :**

**(i) பிணையாளர் நிவாரண நிதி (Surety Relief Fund)**

உறுப்பினர்கள் மாதம் ரூ.10/- பிணையாளர் நிவாரண நிதிக்குச் செலுத்த வேண்டும். இந்தத் தொகை திருப்பித் தரபடமாட்டாது. ஒரு உறுப்பினர் வங்கி நிர்வாகத்தின் ஒழுங்கு நடவடிக்கை, சட்டரீதியான நடவடிக்கை அல்லது வேறு காரணத்தினால் தொடர்ந்து இரண்டு வருடங்கள் (Continuous period of two years) தங்கள் கடனைச் செலுத்தத் தவறினால், எல்லா கூட்டுறவுச் சங்கங்களும் அந்தத் தொகையை அந்த உறுப்பினரின் பிணையாளரிடம் வசூலிக்கின்றன. ஆனால் நமது சங்கத்தில், பிணையாளர்கள் நலனைக் காப்பதற்காக, கடன் வாங்கியவர்களுக்கு பதிலாக, பிணையாளர் செலுத்தவேண்டிய தொகை, பிணையாளர் நிவாரண நிதியிலிருந்து செலுத்தப்படுகிறது.

**(ii) இறப்பு நிவாரண நிதி (Death Relief Fund) :**

ஒவ்வொரு உறுப்பினரும் இறப்பு நிவாரணநிதிக்கு சந்தாவாக மாதம் ரூ.350/- செலுத்தவேண்டும். இந்தத் தொகை மாதாமாதம் பிற இனங்களுடன் வசூலிக்கப்படும். மொத்த தொகையும் உறுப்பினர் சங்கத்திலிருந்து விலகும்போது வட்டியில்லாமல் திருப்பிதரப்படும்.

எதிர்பாராதவிதமாக ஒரு உறுப்பினர் காலமானால், அவரது குடும்பத்தாருக்கு இந்த நிதியில் இருந்து ரூ.3,00,000/- (ரூபாய் மூன்று லட்சம் மட்டும்) அல்லது இந்த நிதியில் செலுத்தப்பட்ட தொகையின் 20 மடங்கு, எது குறைவோ அது வழங்கப்படும். உறுப்பினர் சங்கத்திற்கு செலுத்தவேண்டிய தொகைகள் ஏதாவது இருந்தால் ( If any) இந்த தொகையில் இருந்து கழித்துக் கொள்ளப்படும்.

**சொந்த கட்டிடம் :**

கூட்டுறவு சங்கம், சென்னை பாரிமுனையில் உள்ள சிங்கபூர் பிளாசா வளாகத்தில் மூன்றாவது மாடியில்714 சதுர அடிகொண்ட, அதன் சொந்த கட்டிடத்தில் இயங்கி வருகிறது.

**கணினிமயம் :**

கூட்டுறவு சங்கத்தின் நிதி ஆண்டு ஏப்ரல் முதல் மார்ச் வரை, சங்கத்தின் கணக்குகள் முழுமையாக கணினிமயமாக்கப்பட்டுள்ளது.

**விதிமுறைகள் :**

1. உறுப்பினராக விரும்பும் ஊழியர்கள் விண்ணப்ப படிவங்களை (Prescribed Form) முறையாகப் பூர்த்தி செய்து, ரூ.125/- வரைவோலையுடன் சங்கத்திற்கு அனுப்பவேண்டும். (சங்கத்தின் 10 பங்குகளுக்கு ரூ.100/- + சேர்க்கைக் கட்டணம் ரூ.25/-)

2. உறுப்பினர் விண்ணப்பங்களை பரிசீலித்து, தகுதியின் அடிப்படையில் இயக்குனர் குழு விண்ணப்பதாரரை உறுப்பினராக அனுமதிக்கும் உறுப்பினராக ஏற்கப்பட்ட ஊழியர் குறைந்தபட்சம் மூன்று ஆண்டுகள் உறுப்பினராக செயல்படவேண்டும். அதன்பின், விருப்பப்பட்டால் சங்கத்திலிருந்து விலகிக்கொள்ளலாம்.

3. வேறு பணியாளர் கூட்டுறவு சங்கங்களில் உறுப்பினராக உள்ள ஊழியர்கள், இந்தச் சங்கத்தில் உறுப்பினராகச் சேர்த்துக் கொள்ளப்படமாட்டார்கள் (Dual Membership not permitted).

4. பரஸ்பர பிணையின் (Mutual surety) அடிப்படையில், அதிகபட்சமாக ரூ.600,000/- வரை பிணையக்கடன் வழங்கப்படும். முதல் ஒரு மாதம் சந்தா (one subscription deducted from pay) பெறப்பட்ட பின்னரே கடன் வழங்கப்படும். உறுப்பினரின் மொத்த சம்பளத்தின் 20 மடங்கு அல்லது அவரது பங்கு மூலதனத்தின் 20 மடங்கு இதில் எது குறைவோ, அந்தத் தொகை உறுப்பினருக்கு பிணையக்கடனாக வழங்கப்படும்.

5. புதிதாக சேரும் உறுப்பினர்களுக்கு, அவர்கள் வங்கியில் 13 ஆண்டுகளுக்கு மேல் பணியாற்றியிருந்தால் முதற்கட்டமாக ரூ.1,00,000/- கடன் வழங்கப்படும். எட்டு மாதங்களுக்குப் பின் இந்தத் தொகை இரட்டிப்பாகும். ஒவ்வொரு எட்டு மாதத்திற்கும் கடன் தொகை உயர்த்தப்படும்.

6. புதிதாக சேரும் உறுப்பினர்களுக்கு அவர்கள் வங்கியில் 13 ஆண்டுகளுக்கும் குறைவாகப் பணியாற்றியிருந்தால் முதற்கட்டமாக ரூ.50,000/- கடன் வழங்கப்படும். எட்டு மாதங்களுக்குப் பின் இந்தத் தொகை இரட்டிப்பாகும். ஒவ்வொரு எட்டு மாதத்திற்கும் கடன் தொகை உயர்த்தப்படும்.

7. திருமணம், மருத்துவம், கல்வி போன்ற சிறப்பு நிகழ்வுகளுக்கு, இயக்குனர் குழுவின் முடிவின் அடிப்படையில் அதிக கடன் வழங்கப்படலாம்.

8. ஒவ்வொரு நான்கு மாதங்களுக்கும் கடனைப் (Renewal) புதுப்பித்துக்கொள்ளலாம். அந்த சமயம், உறுப்பினரின் நிலுவையிலுள்ள கடன் தொகை கணக்கில் எடுத்துக்கொள்ளப்பட்டு, மீதமுள்ள தொகை வழங்கப்படும். நான்கு மாதங்களுக்கு முன்னர் கடனை புதுப்பிக்க விரும்பினால், மொத்த கடன் தொகையையும் செலுத்தி புதிய கடன் பெறலாம்.

9. கூட்டுறவு சங்கத்தில் உறுப்பினர்களாகவுள்ள யூனியன் வங்கி ஊழியர்கள் மட்டுமே பிணையாளர்களாக இருக்க முடியும். உறுப்பினர்கள், தங்களுக்கு விருப்பமானவர்களை பிணையாளர்களாகத் தேர்வு செய்துகொள்ளலாம். கடன் பெறும் உறுப்பினர் வைத்துள்ள அளவு பிணையாளரும் பங்கு மூலதனமும், அலகு வைப்பும் வைத்திருக்க வேண்டும்.

10. தற்போதுள்ள சூழலில், கொடுக்கவேண்டிய தொகைகள் நேரடியாக உறுப்பினர்களின் கணக்கில் வரவு வைக்கமுடியாவிடில், அவர்களுக்கு அத்தொகைகள் காசோலையாக வழங்கப்படும்.

11. உறுப்பினர்களின் சந்தா, கடன் தவணை ஆகியவை, யூனியன் பரிவார் (Union Parivaar – HRMS Package) மூலம் சம்பளத்தில் பிடித்தம் செய்யப்படும்.

12. பங்கு மூலதனம் / அலகு வைப்பு ஆகியவை ஒதுக்கப்பட்ட மூன்று ஆண்டுகளுக்குப்பின், உறுப்பினர் / பிணையாளர் கடன் தொகை ஏதும் இல்லாதிருந்து பங்கு மூலதனத்தை / அலகு வைப்பைத் திருப்பி கேட்டால், அந்த தொகை அவருக்கு வழங்கப்படும்.

13. கடைசியாகப் பிணையக்கடன் பெறப்பட்ட தேதியிலிருந்து நான்கு மாதங்களுக்குப் பின் பிணையக்கடன் புதுப்பிக்கப்படும்.

14. வங்கியிலுள்ள அனைத்து பிடித்தங்களும், கூட்டுறவு சங்கத்தின் பிடித்தங்களும் போக வீட்டிற்கு எடுத்துச் செல்லும் சம்பளம் மொத்த சம்பளத்தில் 25%க்கும் அதிகமாக இருந்தால் மட்டும் சங்கம் கடன் வழங்கும். உறுப்பினர் கூட்டுறவு சங்கத்திற்கு செலுத்த வேண்டிய தொகை மொத்த சம்பளத்தில் 50% குறைவாக இருக்க வேண்டும்.

15. ஒரு உறுப்பினர் மாதாந்திர கடன் தவணையை முழுமையாக செலுத்தத் தவறி கடன் தொகை நிலுவையில் இருந்தால், அந்தக் காலகட்டத்தில் அவரது பிணையாளருக்கு எவ்வித கடனும் வழங்கப்படமாட்டாது / புதுப்பிக்கவும் இயலாது.

16. பண்டிகைக் கடன், பேரிடர் நிவாரணக் கடன் பெற, உறுப்பினரின் சம்பளப் பட்டியலின் நகல் விண்ணப்பத்துடன் இணைக்கப்பட வேண்டும்.

17. கடன் தேவை இல்லாதவர்களும் சங்க உறுப்பினர்களாக இணைந்து கொள்ளலாம். அவர்களது பங்கு மூலதனம், அலகு வைப்பு, சேமிப்பு வைப்பு ஆகியவற்றிற்கு நல்ல வட்டி கிடைக்கும். மேலும், அவர்கள் தங்களது சேமிப்புத் தொகையை வைப்பு நிதியாக வைத்து அதிக வட்டி பெறலாம்.

18. கூட்டுறவு சங்கத்தின் உறுப்பினராகும் ஊழியர்கள் குறைந்தபட்சம் மாதாமாதம் கீழ்கண்ட தொகையைச் செலுத்தவேண்டும்.

| | |
|---|---|
| அ. சிக்கன வைப்பு நிதி | ரூ.700/- (Refundable) |
| ஆ. பிணைய நிவாரண நிதி | ரூ.10/- (Non-refundable) |
| இ. இறப்பு நிவாரண நிதி | ரூ.350/- (Refundable) |
| மொத்தம் | ரூ.1,060/- |

19. ஒரு ஊழியரை சங்கத்தில் இணைப்பது, ஒரு உறுப்பினருக்கு கடன் வழங்குவது ஆகியவை இயக்குனர் குழுவின் அதிகாரத்திற்கு உட்பட்டது.

20. அதிகாரிகளாகப் பதவி உயர்வு பெறும் உறுப்பினர்கள், தங்கள் கடன் முழுவதையும் செலுத்தி, சங்கத்திலுருந்து விலகவேண்டும். மேலும், அவர்களுக்கு இறப்பு நிவாரண நிதியிலும் எந்த உரிமையும் இல்லை.

21. கூட்டுறவு சங்கத்தில் எவ்வித பணப்பரிவர்த்தனைக்கும் (cash transaction) அனுமதி இல்லை. உறுப்பினர்கள் தாங்கள் செலுத்தவேண்டிய தொகைகளை (other than salary deduction) சங்கத்தின் வங்கி கணக்கில் மின்னனுப் பரிவர்த்தனை மூலம் செலுத்தவேண்டும். எக்காரணம் கொண்டும் சங்கத்தின் வங்கிக்கணக்கில் நேரடியாக பணம் செலுத்தகூடாது.

22. உங்கள் சந்தேகங்களுக்கு கீழ்கண்ட கூட்டுறவு சங்க நிர்வாகிகளை தொடர்பு கொண்டு விளக்கம் பெறலாம்.

| | |
|---|---|
| திரு. V.வெற்றிவேல் | 94447 86796 |
| திரு. E.நாகேந்திரன் | 79044 80255 |
| திரு. S.வெங்கடேசன் | 98400 35700 |
| திரு. S.சுரேஷ் | 96001 68034 |
| திரு. S.கோதண்டராமன் | 80723 34767 |

தோழமை வாழ்த்துக்களுடன்,

**(V.வெற்றிவேல்)**
**தலைவர்**